Pr. No 231.                                                    நாள் 04.12.11

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

### அறிக்கை – 4.12.2011

தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருவதன் காரணமாக 2.12.2011 அன்று திருநெல்வேலி மாவட்டம், பாலாமடை கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியன் என்பவரின் மனைவி பட்டத்தியம்மாள் மற்றும் நாங்குநேரி வட்டம், மூலக்கரைப்பட்டி பகுதி – 1 கிராமம், மஜரா பெருமாள் நகரைச் சேர்ந்த திரு. சங்கரன் என்பவரின் மகன் செந்தில்வேல் முருகன் ஆகியோர் மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், திருப்பாதிரிப்புலியூர், மீன்குட்டை புதுநகரைச் சேர்ந்த திரு. முனுசாமி என்பவரின் மகன் ஏழுமலை ஆற்றில் தவறி விழுந்து, ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், புலியூர் (மேற்கு) கிராமத்தைச் சேர்ந்த திரு. ரங்கநாதன் என்பவரின் மனைவி செல்வி மற்றும் காலஞ்சென்ற திரு. வேலு என்பவரின் மனைவி அலமேலு ஆகியோர் சுவர் இடிந்து விழுந்ததால் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் திரு. ரங்கநாதன் என்பவரின் குழந்தைகள் (1) சந்திராவதி (2) சரவணன் (3) சசிகலா ஆகியோருக்கு லேசான காயமும், வடக்கு மேலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. தவபுதல்வன் என்பவரின் குழந்தை உதயசூரியனுக்கு பலத்த காயமும் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் அக்குழந்தைகளுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், கடலூர் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இக்குழந்தைகள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மழை காரணமாக பல்வேறு விபத்துகளில் மரணமடைந்த இந்த ஐந்து நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் உதவித் தொகையாக தலா இரண்டு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்த குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் தலா 10,000/- ரூபாயும், பலத்த காயமடைந்த குழந்தைக்கு 25,000/- ரூபாயும், உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

மக்கள் தொடர்பு அலுவலர்
(செய்தி வெளியீடு)
செய்தி மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009